**THE LABOUR COURT, SALEM**
**CAMP COURT AT DHARMAPURI**
**C.P.No. 127 Of 2021**

**07.03.2025**

**WW1 – திரு. சையது சுலைமான்**
குறுக்கு விசாரணை – (எதிர்மனுதாரர் தரப்பில்)

நான் எதிர்மனுதாரர் போக்குவரத்துக்கழகத்தில் நடத்துநராக பணிபுரிந்து 30.04.2019 ல் பணிஓய்வு பெற்றேன் என்றால் சரிதான். பணிஓய்வின் போது என்னுடைய அடிப்படை சம்பளம் ரூ.43,100/– என்றால் சரிதான். அகவிலைப்படி ரூ.3,969/– என்றால் சரியல்ல. எனக்கு HRA ரூ.2,600/– என்றால் சரிதான். எனக்கு ஈட்டிய விடுப்பு தொகையாக ரூ.3,36,949/– 22.01.2021 தேதியிட்ட காசோலை மூலம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு தகுதியான விடுப்பு ஒப்படைப்பு தொகை ரூ.56,288/– என்றால் சரியல்ல. அதிக தொகை வரவேண்டும். எனக்கு IRTT பங்குத்தொகை ரூ.4,360/– பெற்றுக்கொண்டேன். தொழிலாளர் நலநிதி ரூ.89,236/– தொகை காலதாமதமாக கொடுத்தார்கள். 04.08.2022 ல் மேற்படி தொகையை காசோலை மூலம் வாங்கியுள்ளேன். விடுப்பு ஒப்படைப்பு தொகை, IRTT தொகைகளை தவிர இதர தொகைகள் பெற்றுக்கொண்டுவிட்டேன் என்றால் சரிதான். ஆனால் காலதாமதமாக வழங்கினார்கள். அதற்கு வட்டி தரவேண்டும். இதேபோன்ற வழக்குகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்க்ல் செய்யப்பட்டு 4% வட்டி காலதாமதமாக வழங்கப்படும் தொகைகளுக்கு தரப்படவேண்டும் என உத்தரவாகியுள்ளது என்றும், நான் கோரியுள்ள தொகைகளுக்கும் மேற்படி வட்டிதான் தரப்படவேண்டும் என்றால் சரியல்ல. நிர்வாகம் ஒப்புக்கொண்ட தொகைகளை தவிர இதர தொகைகள் குறித்து மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem